முருகப்பெருமான் துணை

இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 656**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

16.07.2021, வெள்ளிக்கிழமை

1. தர்மபலம் கொண்ட ஞானியே
தவசியாக வாழும் ஆறுமுக அரங்கனே
பெருமைமிக்க ஞான யுகம் படைக்க
பேராசானாய் வந்த கலியுகத்தின் மாதவசியே
2. தவசியே ஆறுமுக அரங்கனே
தானுனக்கு ஞான அறிவுரை ஆசிதன்னை
அவனியிலே சுப்ரமணியர் யானும் விளம்புவேன்
அரங்கனே உன் தர்மம் உலகை வெல்லும்
3. வெல்லுமப்பா உன் சன்மார்க்கக் கொள்கைகளும்
விரைந்து உலகமெங்கும் பரவி
இல்லாமை போக்கி இந்த கலியுகத்தில்
ஈடேற்றம் தரும் ஞான ஆட்சிக்காலமாக
4. ஆகவே அரங்கன் உன்னை தொடர்ந்துவரும்
ஆன்மீக ஞான வழிபடைகள் மூலமாக
நன்மை தரும் ஞான ஆட்சி தன்னை
ஞானபண்டிதன் யானும் உன்வழி உருவாக்குவேன்
5. ஆக்கமுற அரங்கன் உன்னை தொடர்ந்து வருகின்ற
ஆன்மீக ஞானவழி தொண்டர்கள் மூலமாக
தேக்கமின்றி ஞானவாழ்வு மக்களுக்கு தந்து
தெய்வீக ஞான ஆட்சி மலர அருள்செய்வேன்
6. அருளவே அரங்கன் நீயே கலியின் சிறந்த ஞானி
ஆற்றல்மிக்க அரங்கன் உன் தர்மமே சிறந்த தர்மமாகும்
வகையான உன் தொண்டர்படைகளே
வையகத்தை மாற்றும் ஞான படைகளாகும்
7. ஆகவே அரங்கனே உந்தனுக்கு நித்தம் நித்தம்
ஆறுமுகன் யான் சக்தியூட்டி மேன்மை தாங்கி வர
மகான் அரங்கன் உன் திருவடி பற்றி
மண்ணுலகோர் ஞானம் பயின்றால் போதும்
8. போதுமப்பா இந்த உலகம்
புண்ணியமோடு கூடிய ஞானவாழ்வு பெற்று
புதுமைபட ஞானசித்தர்கள் ஆட்சிக்காலம் பூதலமெங்கும் உருவாகி
பூவுலகே பெரும் பாதுகாப்பு மிக்க பூமியாக மாறும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–